**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4349

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.07.2021

Accepted: 20.08.2021

Published: 01.10.2021

Citation:
Niranjan, Sujatha. "How to Read Carnatic Music on Violin." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 2, 2021, pp. 70–75.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4349

*Corresponding Author:
sujathaviolin@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# How to Read Carnatic Music on Violin

**Mrs. Sujatha Niranjan**
*Senior Lecturer, Department of Music*
*Kalaipeedam, University of Jaffna, Srilanka*
https://orcid.org/0000-0003-3935-8002

**Abstract** - The violin is a major stringed instrument in South Indian music. It is played as the main instrument in Carnatic music and as an accompaniment to musical performances such as vocals. This is not the heritage instrument of India. Today there is no concert without Carnatic music. Thus it plays an important role in Carnatic music. The present form of this violin was composed in 16th century Italy. The violin, a folk instrument, was first used in South Indian music in the 18th century. It is also more important than any other instrument. It also plays an important role in major concerts. There are many reasons why it is played as the main instrument in Carnatic music more than any other instrument. It has developed to the point where it can be read more than any other instrument in the 20th century for various performances such as vocals, other instrumental events, orchestras, and dance performances. It is also found that Carnatic musicians (male/female) can adjust their pitch to suit their convenience. Since its introduction to Carnatic music, many great scholars have read and succeeded in Carnatic music. In addition, it plays a very important role in Palliya music and has a wide place in Carnatic music.

**Keywords:** Violin, Carnatic music, Concert, Carnatic music items

**References**

1. Sellathurai, B.D. (1984). *Thenaga Isaiyiyal*. Chennai. Fifth Edition.
2. Bakkirasami Bharathi, KA. (2006). *India Isai Karuvulam*, Kussler Publishing
3. Navaratnam, N.V.M. (2002). *Melaitheya Isaiyiyal*, Department of Music, Ramanathan University of Fine Arts, University of Jaffna, First Edition.
4. Pawar, P.L. Learn to Play on Violin, Pankaj Publications, 2nd Edition, New Delhi – India – 110018 – m – 114, Vikas Puri, Jan – 2005.

# வயலினில் கர்நாடக இசை வாசிக்கும் முறை

**சுஜாதா நிரஞ்சன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை
கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***

*தென்னிந்திய இசையில் வயலின் ஒரு பிரதான தந்தி வாத்தியமாகும். இது கர்நாடக இசையில் பிரதான வாத்தியமாகவும் வாய்ப்பாட்டு போன்ற இசை நிகழ்ச்சிகளுக்குப் பக்கவாத்தியமாகவும் வாசிக்கப்படுகின்றது. இது இந்தியாவின் பரம்பரை வாத்தியமல்ல. இன்று கர்நாடக இசையில் வயலின் இல்லாத கச்சேரியே நடைபெறுவதில்லை. இதனால் இது கர்நாடக இசையில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. தற்போதுள்ள இந்த வயலின் வடிவம் 16 ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் வடிவமைக்கப்பட்டது. மேல்நாட்டு வாத்தியமான வயலின் முதன்முதலில் 18 ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய இசையில் கையாளப்பட்டது. இத்துடன் ஏனைய வாத்தியங்களை விட முக்கியமான வாத்தியமாகவும் திகழ்கின்றது. இது 20ம் நூற்றாண்டில் மற்ற வாத்தியங்களை விட வாய்ப்பாட்டு, ஏனைய வாத்திய நிகழ்வுகள், பல்லிய நிகழ்ச்சிகள், நடன நிகழ்வுகள் எனப் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் வாசிக்கக் கூடியளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. இத்துடன் கர்நாடக இசை வாய்ப்பாட்டுக் கலைஞர்களுக்கு (ஆண்/பெண்) அவர்களுடைய சுருதி வசதிக்கேற்பக் கூட்டிக் குறைத்து வாசிக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது. இது கர்நாடக இசைக்கு அறிமுகமானதிலிருந்து பல பெரிய வித்துவான்கள் இதில் கர்நாடகஇசையை வாசித்து வெற்றி கண்டுள்ளனர். இத்துடன் இது பல்லிய இசையில் மிக முக்கியமான இடத்தை வகித்து கர்நாடகஇசையில் அகலமான இடத்தைப் பிடித்துள்ளது.*

***திறவுச்சொற்கள்:*** *வயலின், கர்நாடகஇசை, இசைக்கச்சேரி, கர்நாடகஇசை உருப்படிகள்*

**முன்னுரை**

கர்நாடக இசையில் இன்றியமையாத முக்கியமான இடத்தைப் பிடித்துள்ள வாத்தியம் வயலினாகும். தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சற்கருவி என்ற நால்வகை இசைக்கருவிகளில் தந்தி வாத்திய வகையைச் சேர்ந்த வயலின் பிரதான வாத்தியமாகவும, "பக்கவாத் தியமாகவும் இசைக்கச்சேரிகள் மற்றும் நாட்டியக் கச்சேரிகளிலும், பல்லிய இசை நிகழ்ச்சிகளிலும் வாசிக்கப்படுகின்றது. தற்கால வழக்கிலுள்ள இந்த வில் வாத் தியமான வயலின் மேல்நாட்டிலே *300* வருடங்களுக்கு முன் உருவாக்கப்பட்டது. *16*ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களால் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. இலங்கையை ஆண்ட இராவணன் வில்லைப் பயன்படுத்தி வாசிக்கப்படும் இராவணாஸ்திரம் எனப்படும் தந்தி வாத்தியத்தைப் பயன்படுத்தியதை வரலாறுகள் கூறுகின்றன. இதற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை. *7*ஆம் நூற்றாண்டில் வில்லினால் வாசிக்கப்பட்ட இசைக் கருவிகள் இருந்தமைக்கான ஆதாரங்கள் கோயில் சிற்பங்களில் காணப்படுகின்றன. ராஜஸ்தானில் வில் பயன்படுத்தி வாசிக்கப்படும் இராவணன்கட்டை என்ற இசைக்கருவி நாட்டார்பாடல் பாடும்போதும், நடனத்தின்போதும், பயன்படுத்தப்படுகின்றது. இனிமையான

நாதம் காரணமாக மேல்நாட்டு இசையில் பல்லியம், ஜாஸ் இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படுகின்றது.

சென்னையில் கோட்டையில் தங்கியிருந்த ஆங்கிலேயர்கள் இவ்வாத்தியத்தை வாசிக்கும் போது அவ்விசையினால் ஈர்க்கப்பட்ட பாலஸ்வாமிதீஷிதர் வயலினைக் கையாளும் முறையைத் தெரிந்து கொண்டு பின்னர் ஸ,ப,ரி,த என்றவாறு சுருதி கூட்டப்பட்டதை, கர்நாடக இசைக்கேற்ப ஸ,ப,ஸ,ப எனச் சுருதி கூட்டி மாற்றியமைத்து வாசித்தார். 18ஆம் நூற்றாண்டில் பாலசுவாமி தீஷிதரே முதன்முதலில் கர்நாடக இசையை வாசித்தார். இதன்பிறகு இவ்வாத்தியம் கர்நாடக இசையில் முக்கிய இடம் பெறத்தொடங்கியது.

மேலும் இது ஸ்வயம்பு ஸ்வரங்களுடன் கூடிய கணிசமான நாதம், வில் போட்டு வாசிப்பதால் ஏற்படும் கணிசமானநாதம், ஆடவர் மற்றும் பெண்களின் குரலுக்கேற்பக் கூட்டிக் குறைக்கும் வசதி, நான்கு ஸ்தாயிகளிலும் வாசிக்கக்கூடிய வசதி,பஞ்சம, மத்திம சுருதியில் வாசிப்பதற்கான வசதி, எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லக் கூடிய இலகுவான வடிவம், அதிதுரித காலங்களில் வாசிக்கும் வசதி, கன-நய பாவங்களையும், எல்லா கமகங்களையும் வாசிக்கக் கூடிய வசதி என்பவற்றால் கர்நாடக இசையில் ஏனைய வாத்தியங்களைவிடப் பிரபலமடைந்து காணப்படுகின்றது.

இது முன்னர் பல்வேறு வடிவங்களில் காணப்பட்டாலும் தற்போதுள்ள வடிவத்தை வடிவமைத்தவர் ஸ்ராடிவேரியஸ் (Stradivarius) இது முழுஸைஸ் (Fullsize), முக்கால் ஸைஸ் (7/8), அரை ஸைஸ்(1/2) என பெரியோர், சிறியோர்களின் அளவுகளுக்கேற்பக் காணப்படுகின்றது.
இது பறவைக்கண் சாரலுடன் கூடிய மேப்பிள் (Maple), பைன் (Pine), ஸிகமூர் (Sycamore), ஸில்வர்ஓக் (Silveroak), ஆகிய மரங்களால் செய்யப்படுகின்றது. வயோலா, வயலின், செல்லோ, கொன்றாபேஸ், என்பவை இதன்வடிவங்களாகும். அளவுகள்வித்தியாசமானவை. இதன் தந்தி உலோகம், நரம்புகளால், செய்யப்படும். விரல்பலகை, பிருடை, தந்திதாங்கி, மேல்மெட்டு, என்பவை கருங்காலி மரத்தாலும் Pernambuco, Brazil wood, Snake wood, Beech wood ஆகிய மரங்களால் செய்யப்படும். இதன் பாகங்கள்

### 1. கண்ணுக்குப் புலப்படும் பாகங்கள்

உடல்பாகம், மேற்பலகை, அடிப்பலகை, ஆறுவிலாப் பலகைகள், F வடிவத்துளைகள், பாலம், உடல் மேல்பக்கத்திலுள்ள தந்திதாங்கி, தந்திதாங்கியின் நரம்பு, தந்திதாங்கி இணைத்துக்கட்டப்படும் செப்புக்கம்பி, மோவாய்த்தாங்கி, 4 தந்திகள், சுருதி சேர்க்கப் பயன்படும் திருகு.

### 2. கழுத்துப்பாகம்

விரல்பலகை, விரல்பலகை அடிப்பாகத்திலுள்ள சிறுமரத்துண்டு, 4பிருடைகள்,

### 3. உடலுக்குள் உள்ள பாகங்கள் (ஸூக்கும பாகங்கள்)

நாதக்குச்சி, மேற்பலகையின் அடிப்பாகத்தில் குதிரையின் இடது பாதத்திற்குக் கீழ் ஒட்டப்பட்டிருக்கும் 9 அங்குல நீளமான ஒரு சட்டம்.

### 4. உடலுக்குள் ஒட்டப்பட்டிருக்கும் கண்ணுக்குத் தெரியாத பாகங்கள்.

(Head block), மூலைக்கட்டைகள், Tail Block, Linings

### 5. வில்லின் பாகங்கள் (நீளம் 291/2')

குச்சி, உரோமம், அல்லது மயிர், குச்சியின் முனை, குச்சியின் அடிப்பாகத்திலுள்ள திருகு என்பனவாகும்.

**வயலின் வாசிக்கும் முறை**

மேல்நாட்டு இசையில் இதனை நின்று கொண்டும், நாற்காலியில் இருந்தும் வாசிப்பார்கள். கர்நாடக இசையில் தரையில் அமர்ந்தவாறே வாசிப்பர். ஆடவர்கள் வலது காலை சிறிது முன்நோக்கி நகர்த்தி அதன் அலங்காரச்சுருளை காலிலும், மேற்பக்கத்தை மார்பிலும் வைத்தும் வாசிப்பர். பெண்கள் மேற்பக்கத்தை கழுத்தில் சாய்த்தும் வாசிப்பர். பாலத்திற்கும், விரல்பலகையின் உச்சிப் பாகத்திற்கும் இடையே வில்லைக் கம்பிகளின் மேல் உரசுவதால் நாதம் உண்டாகிறது. இவ்வாறு உரசுவதால் கம்பியின் அதிர்வு குதிரையின் இருபாதங்கள் மூலம் மேற்பலகை முழுவதும் பரவி விலாப்பலகை, நாதக்குச்சி, மூலம் அடிப்பலகைக்கும் பரவி உடல் முழுதும் அதிர ஆரம்பிக்கும்.

இடது கையில் கட்டை ஆட்காட்டி விரலுக்கு இடையிலுள்ள வளைவை பிடில் கழுத்தின் அடிப்பாகத்தில் இணைத்து வாசிக்க வேண்டும். வில்லைப் பிடிக்கும்போது வலது கையின் ஆட்காட்டி விரலைக் குச்சிக்கும் உரோமத்துக்கும் இடையிலும், ஏனைய விரல்களை குச்சியின் மேற்பக்கத்திலும் அடுத்தடுத்து வருமாறு பிடிக்கவேண்டும். இடது கையின் கட்டைவிரல் விரல் பலகையின் இடதுபுறமும், மற்றைய விரல்கள் விரல்பலகையின் வலதுபுறமும் ஸ்வர நிலைகளைப் பிடிக்கவேண்டும். மேல்ஸ்தாயி ஸ்வரங்களை வாசிக்கும் போது இடது கையை மேலே நகர்த்தி வாசிக்க வேண்டும். தந்திதாங்கிக்கும் விரல்பலகைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் ஒரே நேர்கோட்டில் முழுவில்லையும் (Fullbow) தொடர்ச்சியாகப்போட வேண்டும். அரைவாசிவில் (Halfbow), கால்வாசி வில்லைப் பயன்படுத்தி வாசிப்பர். வேகம் கூடக் கூட வில்லின் தூரம் குறையும். ஏனைய தந்திகளில் வில் முட்டாதவாறு ஒவ்வொரு தந்தியிலும் தனித்தனியே முதலில் போடப்பழக வேண்டும். ஸ்வரவில், ஸாகித்தியவில் என இருவகையுண்டு. ஸ்வரப்பகுதிகளுக்கு ஸ்வரவில்லும், ஸாகித்தியப்பகுதிக்கு ஸாகித்தியவில்லும் பயன்படுத்தவேண்டும். தானம் வாசிக்கும் போது தானவில்லைப் (jumb-ingbow) பயன்படுத்தி வாசிக்கவேண்டும்.

இந்த நான்கு தந்திகளும் முறையே E, A, D, G என அழைக்கப்படுகின்றது. இந்த நான்கு தந்திகளும் மத்தியஸ்தாயி பஞ்சமம், மத்தியஸ்தாயி ஸட்ஜம், மந்திரஸ்தாயி பஞ்சமம், மந்திரஸ்தாயி ஸட்ஜம் ஆகிய சுரங்களுக்கு சுருதி கூட்டப்படுகின்றது.

வயலினில் தனிக்கச்சேரி நிகழ்வின் போது 2-3 கட்டை வரை சுருதி சேர்க்கப்படுகின்றது. ஆடவர்களின் பாட்டுக்குச் சுருதி சேர்க்கும் போது 1/2-11/2 வரை சுருதி சேர்க்கப்படுகின்றது. இதற்கு தனித்தந்திகளுமுண்டு, சாதரண வயலினையே தந்தி மாற்றியும் அல்லது மத்திமம் செய்தும் வாசிக்கலாம். 2வது A தந்தியை 1லாவது E தந்தியின் இடத்துக்கும், 3 வது D தந்தியை 2வது A தந்தியின் இடத்திற்கும், 4 வது G தந்தியை 3வது D தந்தியின் இடத்திற்கும், 4வது G தந்தியின் இடத்திற்கு அதே தந்தியையும் மாற்றி சுருதிசேர்த்தும் வாசிக்கலாம். பெண்களின் பாட்டுக்கு சுருதி சேர்க்கும்போது 4-5 1/2 வரை சுருதி சேர்க்கப்படுகின்றது. இதற்கு சாதாரண வயலின் தந்தியையே சுருதிகூட்டியும் அல்லது இதற்கென தனியாகவுள்ள தந்தியையும் போட்டு சுருதி சேர்த்தும் வாசிக்கலாம். ஒவ்வொரு கட்டைக்கும் தனியாகவுள்ள தந்திகளின் விபரங்கள்

| G | D | A | E | |
|---|---|---|---|---|
| 18 | 21 | 25 | 28 | ½ - 1½ |
| 19 | 22 | 25 | 28 | 1½ - 2 |
| 20 | 23 | 26 | 29 | 2½ - 4 |
| 21 | 24 | 27 | 30 | 4½ - 5½ |
| 22 | 25 | 28 | 31 | 5½ - 6 |
| 23 | 26 | 29 | 32 | 6 - 6½ |

முதன்முதலில் கர்நாடக இசையை ஆரம்பிக்கும் போது மாயாமாயவகௌளை ராகத்திலமைந்த ஸ்வரவரிசையே ஆரம்பிப்பார்கள். இவ்வாறு வாசிக்கும் போது பின்வரும் விரல் வைக்கும் நிலைகளைப் புரிந்துகொண்டு வாசித்தல் இலகுவான வழியாகும்.

ஆரோகணம், அவரோகணம் வாசிக்கும் போது ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் தனித்தனியே முழு வில்லையும் போட்டு வாசிக்க வேண்டும். இரண்டாம் காலத்தில் ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் அரைவாசி வில் போட்டு ஸ்வரவில்லும், இரண்டு ஸ்வரத்திற்கு ஒரு வில் போட்டு ஸாகித்திய வில்லிலும், மூன்றாம் காலத்திற்கு ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் கால்வாசி வில் போட்டு ஸ்வரவில்லும், நான்கு ஸ்வரத்திற்கு ஒரு வில் போட்டு ஸாகித்திய வில்லிலும் ஏனைய தந்திகளில் முட்டாதவாறு வாசிக்கக் கற்க வேண்டும். இவ்வாறு மந்திரஸ்தாயியில் ஆரம்பித்து நான்கு தந்திகளிலும் வாசிக்க வேண்டும். இதன்பின் ஸ்வரவரிசை, மேல்ஸ்தாயிவரிசை, தாட்டுவரிசை, அலங்காரம் என்பவற்றையும், ஜண்டை வரிசையை ஸாகித்திய வில்லிலும் கற்க வேண்டும். இதற்கு அடுத்தபடியாக நாம் கீதம் என்ற உருப்படியை கற்கின்றோம். இதுவே முதன் முதலில் அங்க வித்தியாசமில்லாத ஸ்வர, ஸாகித்தியமாகக் கற்கும் உருப்படியாகும். இதனை ஸாகித்தியத்திற்கேற்ப வில் போட்டு வாசிக்க வேண்டும்.

கீதத்திற்கு அடுத்து அங்க வித்தியாசத்துடன் ஜதீஸ்வரம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளைக் கற்கின்றோம். இவற்றில் பல்லவி வாசித்து அனுபல்லவி, ஒவ்வொரு சரணம் வாசிக்கும் போதும் பல்லவியைத் திரும்பவும் வாசித்து வாசித்தே எடுக்க வேண்டும். இதில் ஜதீஸ்வரம் ஸ்வரத்தால் ஆனதால் ஸ்வரவில்லையும், ஸ்வரஜதி ஸ்வர ஸாகித்தியத்தால் ஆகையால் ஸாகித்தியம் வருமிடங்களில் ஸாகித்திய வில்லையும் பயன்படுத்தி வாசிக்க வேண்டும்.

அடுத்து சபாகானத்திற்கும் அப்பியாச கானத்திற்கும் பொதுவான உருப்படியான வர்ணம் தானவர்ணம், பதவர்ணம் என இரு வகைப்படும். தானவர்ணத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய ஸாகித்தியம் வருமிடங்களில் ஸாகித்தியவில்லையும், ஸ்வரப்பகுதியாலான முக்தாஸ்வரம், சிட்டாஸ்வரம் வருமிடங்களில் ஸ்வரவில்லையும் பயன்படுத்தி வாசிக்கவேண்டும். ஆனால் பதவர்ணத்தில் முழுவதுமே ஸ்வரஸாகித்தியத்தால் அமைந்துள்ளமையால் ஸ்வர ஸாகித்தியவில்லைப் பயன்படுத்தி வாசிக்கவேண்டும்.

கீர்த்தனைகளிலும், க்ருதிகளிலும் ஸாகித்தியத்திற்கேற்ப ஸாகித்தியவில்லைப் பயன்படுத்தி வாசிக்கவேண்டும். நிரவல் இரண்டாம் காலம் வாசிக்கும்போது சிலர் தானவில்லைப் பயன்படுத்தியும் வாசிக்கின்றனர். இவ்வாறு பதம், ஜாவளி என்பவற்றுக்கும் ஸாகித்தியத்திற்கேற்ப வில்லைப் பயன்படுத்தி வாசிக்கவேண்டும். அடுத்து மனோதர்மத்தின் உச்சப்பகுதியான பல்லவியில் தானம் வாசிக்கும்போது தான உச்சரிப்புக்கேற்ப தானவில்லைப் (Jumbing bow) பயன்படுத்தி வாசிப்பார்கள். தாரஸ்தாயி, அதிதாரஸ்தாயியை வாசிப்பதற்காக வயலினில் ஐந்து தந்தி பூட்டி வாசிக்கின்றனர். ஐந்து தந்திகள் பூட்டக் கூடியவாறு ஐந்து பிருடைகள், ஐந்து Adjuster உள்ள வயலின் பாவனையிலுள்ளன. நான்கு தந்தி வயலினில் தாரஸ்தாயியை வாசிப்பதற்கு கையை மேலே நகர்த்தி வாசிக்கவேண்டும். இவ்வாறு ஐந்துதந்தி வயலினில் தனிக்கச் சேரிக்கும் மற்றும் பாடகர்களுக்குப் பக்கவாத்தியத்தின் போதும் தாரஸ்தாயி, அதிதாரஸ்தாயி வருமிடங்களில் கையை மேலே நகர்த்தாமல் ஐந்தாவது தந்தியைப் பயன்படுத்தி வாசிக்கலாம்.

இத்துடன் பாடகருக்கும், நடனத்திற்கும் பக்கவாத்தியம் வாசிக்கும் போது பாடகரைக் குழப்பாமல் அவரை அனுசரித்து வாசித்தலே முறையாகும். இப்பொழுது Condact mike கச்சேரியின் போது வயலினில் ஒட்டியும், அல்லது வயலினுக்குள் வைத்து செய்தும்

நேரடியாக ஒலி வாங்கியில் இணைத்தும் வாசிக்கின்றனர். மேலும் தற்போது நவீன மாற்றங்களுக்கேற்ப Electric violin, இரட்டை வயலின் புழக்கத்தில் வந்துள்ளது. Electric violin Condact mike மூலம் ஒலிவாங்கி பெட்டியில் இணைத்து வித்தியாசமான ஒலிகளுக்கு Set பண்ணி வாசிக்கின்றனர். மேலும் கணினியில் பல விதமாக Sound Setting செய்து வயலினை Condact mike மூலம் கணனிக்கு இணைத்து, அதிலிருந்து Sound box லிருந்து சத்தம் வெளிவருவதால் நாதம் கனதியாகவும் இனிமையாகவும் கேட்கிறது. இரட்டைவயலினை உருவாக்க பெருந்தொகைப் பணம் செலவாவதால் இதனை ஒரு சிலரே வாசிக்கின்றனர். இரட்டை வயலினைக் கர்நாடக இசையில் வாசித்துப் புகழ் பெற்றவர்கள் இந்தியாவின் வயலின் மேதை எல்.சங்கர், நெய்வேலி இராதாகிருஷ்ணன் என்போர்களாவர்.

இவ்வாத்தியத்தை மைசூர் சௌடையா, புதுக்கோட்டை நாராயணஸ்வாமி ஐயர், சீர்காழி நாராயணஸ்வாமிஐயர், திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர், துவாரம் வெங்கடசாமிநாயுடு, பிடில் வெங்கோபராவ், திருச்சி கோவிந்த சாமிப்பிள்ளை, என்போர் வாசித்துப் பிரபலமடைந்துள்ளனர்.

## முடிவுரை

இவ்வாறு இந்த விரல் அணுகுமுறையைப் பயன்படுத்தி கர்நாடக இசையை வாசிக்கலாம். இவ்வளவு சிறப்பையும் கொண்டுள்ளதால் இவ்வாத்தியமானது கர்நாடக இசையில் மிகுந்த சிறப்பு பெற்று விளங்குகின்றது. இது இசை, நடனம், இசைநாடகம், பல்லியம், மேலைத்தேய இசை எனப் பல்வேறு இசைகளிலும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

## உசாத்துணை நூல்கள்

1. செல்லத்துரை, பி.டி. (1984). தென்னக இசையியல், ஐந்தாம் பதிப்பு, சென்னை.
2. பக்கிரிசாமிபாரதி, கே.ஏ. (2006). இந்திய இசைக்கருவூலம், குசேலர் பதிப்பகம்.
3. நவரத்தினம், நா.வி.மு. (2002). மேலைத்தேய இசையியல், இசைத்துறை, இராமநாதன் நுண்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு,
4. Pawar, P.L. *Learn to Play on Violin*, Pankaj Publications, 2nd Edi – Jan – 2005, New Delhi – India – 110018 – m – 114, Vikas Puri